உ

சிவமயம்.

கணபதி துணை.

ஸ்காந்த புராண கீர்த்தனை.

(ஐந்தாவது பாகம்.)

அசுரகாண்டம்—II.

இஃது

இராமநாதபுரம் சிவகங்கை

என்னும் உபயஸமஸ்தான வித்வான்

பெருங்கரை

பிரும்ஹஸ்ரீ கவிகுஞ்சர பாரதி

அவர்களாலியற்றப்பட்டு

அவர்கள் பேரன்

சென்னை ஹைகோர்ட்டு டிரான்ஸ்லேடர்

N. கோடீசுவரய்யர், B. A.,

அவர்களாற் பதிப்பிக்கப்பட்டது.

Madras:

PRINTED AT THE SCOTTISH PRESS.

1914.

Right Registered.

Q 26:417
M14
186142

காசிபர்சொற்படி நல்லதபசைச்செய்ய சித்தமாயிருந்த சூரன் முதலியோர் மனதை மாயைகலைத்து செல்வம் சௌரியம் முதலிய வைகளை அடைந்து தேவர்களை அழிக்கும் வழியைத்தேட வேண்டு மெனல்.

விருத்தம்.

இக்கதையைக் காசிபனிவ் வாறு கூற
விணங்கிமைந்த ரனைவர்களும் வணங்கி நின்று
தக்கமதி யுரைத்தீரப் படிக்கே நாங்கள்
தவம்புரிந்து வருகுவமென் றெழுந்த போதி
லக்கணமே மாயைநகை புரிந்து சேய
ரனைவரையும் பார்த்துலகிற் செல்வங் கீர்த்தி
மிக்கசுகங் கனதைமென்மே லுயரு மான
விதஞ்சொல்வே னெனமறுத்திவ் விதஞ்சொல் வாளே. (௬௭)

(௨௯) கீர்த்தனம். இராகம் - பியாகு—ஆதிதாளம்.

பல்லவி.

சூரர்களே நேரே - என்
சொற்படிசெய்வீரே

அநுபல்லவி.

தீரமும்பெற்றியும் - வீரமும்வெற்றியும்
திருந்தும்படிக்குப்புத்தி - பொருந்துஞ்செய்கையைநத்திச் (சூரர்)

சரணங்கள்.

(௧) செல்வப்பொருள்களிலுங் கல்விப்பொருள்சிலாக்யம்
தெள்ளத்தெளிந்ததனைக் கொள்ளுவதேமனோக்யம்
அல்லலகற்றிநாளும் நல்குஞ்சகலபாக்யம்
ஆர்க்கும்புகழ்ச்சிதந்து சேர்க்கும்போகபோக்யம் (சூரர்)

(௨) அஸ்த்ரசஸ்த்ரவித்தைகள் யாவும்படித்துத்தேர்ந்து
அடல்சேர்கரிமாவேற்றம் அணிரதங்களுமூர்ந்து
சுற்றுந்தொழிலுமல்ல யுத்தங்களிலுஞ்சார்ந்து
தொடுத்தகாரியமெல்லா முடித்திடும்படிக்கோர்ந்து (சூரர்)

(௩) பகல்வெல்லுங்காகத்தைக் கூகையிரவில்வென்று
பழிக்குப்பழிகள்வாங்கும் பழக்கம்போலெதிர்நின்று
சகலதேவர்களெனும் பகைவேர்களைந்துகொன்று
சத்ருசேடமின்றித்தொலைத்திடுவதேநன்று (சூரர்)

மாயை, சூரன் முதலியோரை வடதிசைசென்று பரமசிவனே நோக்கி வேள்வி செய்யச்சொல்லி அவர்களுக்கு வஞ்சனையுற்ற மந்திரதந்திரங்களேயும் கற்பித்து மறைந்திடலும், அவள் பிரிவை நினைந்துவருந்திய காசிபரைப் பிரமதேவர் தேற்றியபின் அவர் தவத்திற்கேகப் பிறகு சூரன் முதலியோர் சுக்கிரபகவானிடம் உபதேசம் பெற்று ஓமகுண்டங்கள் வகுத்து வீரயாகம் செய்தல்.

விருத்தம்.

மாயையிந்த விதங்கள்சொல்லித் தவமியற்ற
வளம்பெறுமுத் தரபூமி சென்று நீங்க
ணேயமுடன் விரிவுளதா யோம குண்ட
நிறுவியே பலசமித்தா லழல்கள் மூட்டி
ஆயபல பண்டமாங் கிச்ங்கள் சோரி
யாகுதிகள் புரிந்தரனே த்யானஞ் செய்தாற்
றாயபலன் முழுவதுங்கை கூடுமென்றுள்
துதிகொண்டா ரன்னேசொல்லை மதிகொண் டாரே. (நஅ)

பின்னும் விருத்தம்.

வாதுறுமந் திரங்களுந்தந் திரங்களுமெந் திரங்களுநல்
வகையாய்க் கற்கப்
போதுமென மாயைசொலி மறைந்திடக்கா சிபன்கலங்கிப்
புலம்பும் போது
வேதனுந்தேற் றிடத்தவத்துக் கேகினனப் பாற்சூரன்
வேள்வி செய்யுஞ்
சேதியைச்சுக் கிரபகவா னோர்ந்திட்டா னவ்விடம்போய்ச்
சேர்ந்திட் டானே. (நகூ)

(நய) திபதை. இராகம் - ஸாவேரி—ஆதிதாளம்.

(க) வந்தகுலகுருவைக் - கண்டிறைஞ்சியேசூரன்
மகிழ்ந்துமணியாசனங் கொடுத்தானே - பல
தந்த்ரமனுவின்படி - பூசனேசெய்துமுடித்
தலேவணங்கியருகி லடுத்தானே.

(உ) அடுத்தசூரனேக்கையா - லெடுத்தணேத்துச்சுக்கிரன்
ஆசிமொழிகள்சொல்லித் துதித்தானே - நீ
தொடுத்தபடியேவேள்வி - முடித்துத்தேவரைவெல்லுஞ்
சூழ்ச்சிசொல்வோமென்றன்பு கதித்தானே.

186142

(ங) கதித்தமனுவிஞ்சைக - ளனைத்தையும்விவரமாய்க்
காதிலுபதேசித்துப் புகழ்ந்தானே - நெஞ்சிற்
பதித்துக்குருமொழியை - மதித்துநமக்கிதுவே
பாக்யமென்றெண்ணிச்சூரன் மகிழ்ந்தானே.

(ச) மகிழ்ந்துசயினியங்க - ளனந்தஞ்சூழவெழுந்து
வடதிசைசென்றணிகள் தொகுத்தானே - அங்கே
தகுந்தவடநிழலி லயுதயோசனைக்குள்விஸ்
தாரவோமகுண்டங்கள் வகுத்தானே.

(ரு) வகுத்தனேகஞ்சூரரை - மிகுத்தகாவலாய்ச்சூழ
வைத்தனேகமலைகொண் டிடுக்கியே - கோட்டை
பகுத்தணியாகவே - பருத்தசாமத்திருளைப்
பக்கமெங்கினுஞ்சுற்றி யடுக்கியே.

(சு) அடுத்தசூரர்க்குத்தாரங் - கொடுத்துமதிளைச்சுற்றி
அடவியெனவேவேலி பொருத்தியே - வலி
திடத்நவசத்திபத் - திரகாளியையுமுருச்
செபித்துக்காவலாகவே யிருத்தியே.

(எ) அஷ்டவயிரவரைக் - கிட்டியிருக்கச்செய்தோ
ரயுதஞ்சூரர்க்குத்தாரஞ் சொல்லியே - மண்
வெட்டுங்கருவிகொண்டு - தொட்டகழிக்கிடங்கு
மிகுபாதலம்வரையிற் கெல்லியே.

(அ) பாதலக்கங்கையஞ்ச - ஆதிசேடனுநெஞ்சம்
பதறவஷ்டகஜமு நடுங்கவே - இந்தப்
பூதலத்திலெவர்க்கும் - பாதைகண்டுபிடித்துப்
போகவழியில்லாம லொடுங்கவே.

(கூ) அஷ்டகோணமாகநூற் - றெட்டுவேதிகையொவ்வொன்
றாயிரம்யோசனையி லமைத்தானே - பின்பு
நட்டநடுவின்மூன்று - வேதிகையுமிசைத்து
நான்குவாசலுநன்றாய்ச் சமைத்தானே.

(ய) சத்திதனைமனதி - னத்திப்பரமசிவன்
தன்னைச்சுழிமுனையி லுன்னியே - ஏக
சித்தமுடன்யோகாச - னத்திலிருந்துதவத்
தியானஞ்செய்தானேயருள் துன்னியே.

விருத்தம்.

சோதி மயமாய் வேதிகையுஞ் சூரன் வகுத்துத் தவம்புரிந்தான்
சொன்ன மலைபோற் பொற்குவையுந் துரங்கஞ் சிங்கம் புலியாளி
மேதி மதமா வசங்கள்முதல் விலங்கி னிறைச்சி விதவிதமாய்
விடஞ்சேர் சோரி மாங்கிசமும் வெறியார் கட்சா ராயமுடன்
சாதி நறுநெய் யெண்ணெகளுஞ் சமித்துத் தருப்பை யட்சதையுஞ்
சமைத்த கறியோ டனக்குவையுந் தயிர்பால் மோர்தாம் பூலமொடு
கோது குறைவில் லாதபடி கொடுத்தே மாயை மறைந்து சென்றாள்
கோர வசுரன் வேள்விசெய்யக் குறித்தே நியமம் பதித்தானே (௬௰)

(௬௧) கீர்த்தனம். இராகம் - நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

பல்லவி.

சூரன்வீரவேள்விசெய்தான் - மாயைசொற்படி (சூரன்)

அநுபல்லவி.

சோரிமுதலாங்கருவி - சாரிசாரியாப்க்குவித்துச்
சுற்றியோமகுண்டமதைப் - பத்திபத்தியாயமைத்துச் (சூரன்)

சரணங்கள்.

[ங்கட்டித்
(க) சிற்பரனைநோக்கியேஸங் கற்பஞ்செய்துபவித்திரந் தரித்து - கங்கண
[க்ஷாமிக்
திக்குபந்தனங்கள்செய்த தற்குதவியானவரை வரித்து - வீரல
கொப்பும்படிக்குப்பலி கொடுத்துமுபசரித்து
உக்ரமமந்திரங்கள்மு ழக்கியேயுச்சரித்து
கற்பனைமிகுந்திடும்பூ தப்பிசாசங்கட்கிரத்தங்
கலந்தோதனங்கொடுத்துப் பலன்பெறவேயடுத்துச் (சூரன்)

[றும்
(உ) அஷ்டவயிரவருக்கு மிஷ்டமுடனேபலிகளூட்டி-குண்டங்கள்தோ
அட்டமாங்கிசங்கள்மது விட்டுக்கடுங்கனலினைமூட்டி-தாரகன்றன்னை
திட்டமாயோரோமகுண்டத் திற்கருகிலிருத்தி
சிங்கமுகனையோரோம குண்டத்தினிலிருத்தி
சட்டமுடனர்ச்சனைசெய் திட்டுமெய்வாய்மனமொன்றாய்த்
தற்பரன்றனையேவாழ்த்தி மெய்ப்பணிவிடைசெய்தேத்தி (சூரன்)

(ரு) நச்சுமரத்துச்சமித்தோடெச்சமதில்மதுவையுஞ்சொரிந்து மலைமலையாய் நவவிததானியங்களொடுகடோகுதியும் புரிந்து செய்யுமோ
மெச்சியேகுண்டத்தழல்வா னுச்சிவரையிலும்மட்ட [மத்தால்
மேலுலகுங்கீழுலகுஞ் சாலவேபுகைகள்முட்ட
வச்சிரதரனுங்கண்ட யர்ச்சியுடனேநடுங்க
வானவர்க்குள்ளங்கொதிக்கத் தானவர்க்கின்பங்கதிக்கச் (சூரன்)

இவ்விதம் பதினாயிரம் வருஷம் தவமியற்றியும் பரமசிவன் வராததால் சூரன் பின்னும் ஆகாயத்திலிருந்து ஆயிரவருஷம் கடுந்தவம்புரிய அதற்கும் ஈசன் இரங்காததால் அவன் ஓமகுண்டத்தில் விழுந்தழிய அதற்குவருந்திய சிங்கமுகன் தனது தலைகளை ஒவ்வொன்ருய் அறுத்து ஆகுதிசெய்யப் பரமசிவன் நேரில்வந்து சூரபத்மனை எழுப்பி வேண்டியவரங்களை அளித்துத்தமது சக்தியின்றி அவனுக்கு அழிவில்லை என்று அருளித் திருவுருமறைதல்.

விருத்தம்.

மகத்திலெழுங் கொடுந்தீயெண் ணாயிரம்யோசனைபோய்
மலரவன்மா யவன்முதலோர் மயங்கிடவெண் ணாண்டு
சகத்திரம்பத் தாகியும்பின் பரமன்வர விலையால்
தனித்துவிண்ணி லிருந்துதச சதவருட முயிரோ
டகத்தைவெறுத் துதிரமொடு சதையையுமங் கோமத்
தழலிடலும் வரவிலையென் றடல்மிகுவெஞ் சூரன்
சிகித்தழலின் வயிரகம்ப முனையில்விழுந் தழியச்
சிங்கமுகன் தெரிந்தலறிப் பொங்கியழுதனனே (சுக)

நிலைமண்டில ஆசிரியப்பா.

வெங்கனனசுரன் வீய்ந்திடல்கண்டு
சிங்கமாமுகவன் திகைத்துளம்பிண்டு
ஐயயோஎன்ற னருந்துணைவோனே
வெய்யதீவாயினில் வீழ்ந்தழிவானே
வரந்தரவெதிரே வந்திலாத்தூயோ
னரன்றனைத்தேடி யலைந்துநொந்தாயோ
தானவர்க்கெல்லாம் தலைமைமன்னவனே
ஏனையோரெங்கட் கினியந்தமுன்னவனே
பவமிகுமமரர் பழித்திடலாச்சே

தவமெலாம்வீணே அவமதாய்ப்போச்சே
எனப்பலவிதமா யிகற்சிங்கமுகனும்
நினைத்தழும்போது நேர்ந்துதாரகனும்
சாலையிற்புரண்டு தளர்ந்துவாய்புலம்பி
மேலெலாங்கண்ணீர் விட்டுடலலம்பி
கோட்டினால்நிலமெலாங் குத்தியேயுதறிட
கூட்டுறுமவுணரும் கோவெனக்கதறிட
பாய்மரமிழந்த பருங்கலம்போலும்
தாய்முகங்காணச் சவலையைப்போலும்
அரசனையிழந்து அவனியில்நண்ணி
வரிசையோடிருப்பது வசையெனவெண்ணி
ஆயிரந்தலையோ டமர்ந்தசிங்காசுரன்
மாயிரும்புவியில் வளம்பெருநீசுரன்
ஒழுங்குறுதலைகளை ஒன்றொன்றாய்வீட்டியே
கொழுந்தெழுமக்கினிக் குண்டத்துக்கூட்டியே
செகுத்திடச்செகுத்திடச் சிரமதுதளிர்த்திட
மகத்துவமனுச்சொலி மண்டெரிக்களித்திட
விரைவினிற்கயிலையை விடுத்தருளுவந்து
பரமனுந்தெரிந்து பழிக்கஞ்சிவந்து
நஞ்சரிமுகனை நயஞ்சொலித்தடுத்து
அஞ்சலென்றன்போ டபயமுங்கொடுத்து
மங்கியசூரனை வாழ்விக்கவிரும்பி
கங்கையையழைக்கவக் கன்னியுந்திரும்பி
வந்தரனடியை வணங்கியேமிகுந்த
செந்தழன்மகத்திற் சென்றவள்புகுந்த
போதினிற்சூரன் புலனொடுதழைத்து
மேதகுசொருபம் விளங்கவேபிழைத்து
வந்தடிபணிந்து மகிழ்ச்சியும்பெற்றவன்
நந்தியோடரனை நாடியங்குற்றபின்
புண்டரீகத்துறை போதனுமொடுங்க
விண்டுவேமுதலாய் விண்ணவர்நடுங்க
வீரமுந்திறமும் வெற்றியுங்கதிக்க
ஈரேழுலகமும் இறைஞ்சியேதுதிக்க
வச்சிரகாயமு மனத்திடையூக்கமும்
இச்சையின்படிதனக் கிணையிலாவாக்கமும்
புற்புதம்போன்ற பொறிபுலனைந்தையும்

அற்புதமாகவுள் ளடக்கித்தவஞ்செயும்
சிலர்கள்முதலெண் டிக்கினுக்குரிய
பாலர்களெல்லாம் பணிவிடைபுரிய
வஞ்சமுஞ்சாலமும் வாய்ந்ததந்திரங்களும்
விஞ்சைகள்முதலாய் விளங்குமந்திரங்களும்
சக்கரம்பிண்டி சகலசஸ்திரங்களும்
உக்ரசங்காரத் தொலிக்குமஸ்திரங்களும்
வானமும்புவியு மயங்குமோகனமும்
தீநிறவிழிசேர் சிங்கவாகனமும்
அகந்தனினினைத்த அண்டங்கள்நிதமும்
திகழ்ந்துபோய்வருமிந் திரஞாலரதமும்
அரும்பாசுபதமும் அபேத்தியகவசமும்
தரந்தரமான தனிக்கொடித்துவசமும்
பகையைவேர்களைந்து படைகொண்டுவெட்டி
அகலுமாயிரத்தெட் டண்டமுங்கட்டி
உகந்துநூற்றெட்டு யுகங்களிசார்ந்து
திகழ்ந்திடுவாயெனத் திருவருள்கூர்ந்து
மிக்கவன்பெருமையை வியந்துகொண்டாடித்
தக்கதோர்வரமெலாந் தந்துரையாடி
இயற்சத்தியன்றியே யாவருமடுத்துச்
செயிக்கவொண்ணுதமோ திரத்தையுங்கொடுத்துச்
சங்கரன்கயிலைச் சயிலமுற்றனனே
பொங்கியேசூரன் புகழ்ச்சிபெற்றனனே (சஉ)

சூரன் சுக்கிரபகவானிடத்தில் மாயமந்திரங்கள் உபதேசம் பெற்று திக்குவிஜயம் செய்தல்.

(௩உ) திபதை. இராகம் - தோடி—அடதாளம்.

(க) அரனுலருள்வரங்கள் பெற்றானே - சூரன்
அளவில்லாதமகிழ்ச்சி யுற்றானே - விண்ணில்
வெருவியமரரிதைக் கண்டாரே - தங்கள்
விதிவசமென்றுமனம் பிண்டாரே

(உ) துணைவர்முதற்படைகள் கூடியே - வரச்
சுக்கிரனிருக்கையை நாடியே - மல
ரிணையடியைமுடியி லேற்றினன் - தனக்
கீசனருளியதைச் சாற்றினன்

(௩) தாய்குருகேட்டின்ப முறியே - கையாற்
சூர்னையணைத்தாசி கூறியே - கெடு
மாயமந்திரதந்திரவகை தானே - காதில்
வளமுடனுபதேசஞ்செய்தானே

விருத்தம்.

தத்துவமாம் பரனிச்சா சத்தி ஞான
சத்திகிரி யாசத்தி மூவ தான
நித்தியமாம் புவனமதின் படைப்புங் காப்பும்
நிருவியசங் காரமெனுந் தொழிலைச் செய்யு
மத்துவித மனைத்தையுஞ்சூ ரனுக்குக் கூறி
அண்டமதி னியற்கையெலா மளவிட் டோதிப்
புத்திவிஞ்சை மனுவுரைத்த குருவைப் போற்றிப்
புகழ்ந்திட்டான் சூரனுள்ளந் திகழ்ந்திட் டானே. (சங)

(ருரு) கீர்த்தனம், சந்தத்தரு. இராகம் - மத்தியமாவதி—சாப்புத்தாளம்.

குருவாய் மொழிவே தமெனச்சி ரசினிற்கொண்
டொருதா யெனுமா ளையிடத்தி னிதுசென்று
திறமும் தவமுகிமை யுரமும் சிவனருள்செய்
வரமும் சரிவரவி வரமுட னேதை
மகனே யினிவா னவரைச் சமர்செயித்துத்
திசையா வையுமோர் குடையிற் கயிலணைத்துத்
திருவும் வியனுறையைந் தருவும் சுரபியெழில்
மருவு மணியின்வகை யுருவொட னேக
விதமா கியபோ கசுகவை பவமும்பெற்
றளகா புரியா ளரசைச் சமரில்வென்று
நலமு மினிவிசைய பலமும் அதிகபுஜ
பலமும் தனிநமது குலமுமெந்நாளும்
அழியா வகைநா னுதவித் துணைபுரிய
வருவேன் புதல்வா வெனவுத் தரவுரைத்த
அனைபின் பதமலர்வந் தனையும் புரிந்துதார
கனையு மரிமுகவன் றனையு மனேக
சதகோ டிகளா மசுரப் படையுங்கைக்கொண்
டிடிபோ லவேபே ரிகைமத் தளமொலிக்க
மலையுங் கடலிலெழு மலையும்திசையின்கர
மலையுந் தமதுநிலை குலையவுமாதி

சிவஞ னவனீ றுசெயப்ர ளையருத்ர
னெனவே வருமா றெனவுக்ர மமிகுத்த
கதமுங் கவனதுர கதமும் கரிகளோர
யுதமுங் கனகமணி ரதமுதலான
படையோ டளகா புரியைப் பொரவளைந்து
கொளவே மலர்வா கனம்வைத் தடிபணிந்த
தனதன்ற னையுமிக மனஅன்பு தவிபோகி
தனையுந் துணையமரர் தனையும்போராடி
உடனே யவனூ ரையுமக்கி னிகொளுத்தி
அழலோ னொடுதெற் கெமனைப்பொ ருதிவென்று
இசையுந் திகழ்நிருதி திசையும் புனலரசன்
றிசையும் கடுவனிலன் றிசையும்வென்றனனே.

தாரகன் மஹாவிஷ்ணுவுடன்போர்புரிந்து அவர் சக்கரத்தைத் தன் கழுத்திற் ஆபரணமாய்த்தரித்தல்.

விருத்தம்.

திக்குகளெ லாம்வளைந்து விசையங் கொண்டு
திறலவுணன் றம்பியொடு படையுஞ் சூழ
அக்கணமே கடலேழுஞ் சென்று தாவி
அங்குமுள தீவுகளெ லாங்கைக் கொண்டு
மிக்கபொரு ளானதையுங் கொள்ளை யிட்டு
மீண்டு திருப் பாற்கடலிற் பள்ளி கொள்ளுஞ்
சக்கரத்த னிடத்தினிற்சென் றுறுமிச் சேனைத்
தளங்கொண்டான் தாரகன்போர் வளங்கொண் டானே.(சச)

(ருச) திபதை. இராகம் - ஆரபி—ஆதிதாளம்.

(க) சக்ரதரனுடனே தாரகாசுரன்மிகச்
சண்டைசெய்யவென்றெதிர் குதித்தானே - திரி
விக்ரமனுமதிக உக்கிரத்துடன்சின
மேவியவனுடன்வந் தெதிர்த்தானே.

(உ) தீயபாதகனந்த மாயவன்மீதினிலே
சிலைவளைத்துக்கணைகள் தொடுத்தானே - செழுங்
காயாம்பூவண்ணன்வெகு கணைகள்விடுத்திட்டந்தக்
கணைகளெதிர்வாராமல் தடுத்தானே.

(கூ) சித்ரரதத்திலேறி மத்தன்சிலகணைகள்
ஸ்ரீதரன்மீதுவிட்டுத் தாக்கினான் - மாயோன்
அஸ்த்ரவருஷம்பொழிந் தெற்றியவன்கணையை
அறுத்துத்தேர்தனையுந் தூளாக்கினான்

(௪) இரதந்தூளாகக்கண்டு மறுதேரிலேறிவஞ்சன்
இலக்கமற்றசரங்கள் விளைத்தானே - சிறைக்
கருடன்சரீரமதில் உருவிநுழைந்திரத்தங்
காணப்பக்ஷிராஜனும் களைத்தானே.

(௫) களைத்தவன்தெளிந்தெழுந் திடக்கண்டக்கணத்திலச்
சுருடன்மீதிலச்சுத னேறினான் - கோபம்
விளைத்தவுணப்படைக ளனைத்துமடிந்துருள
மீறிவெகுகணைகள் தூறினான்.

(௬) கரங்கள்சிரங்களற்று முரங்கள்புரங்களற்றுங்
கால்களற்றுமசுர ரழிந்தாரே - முன்பு
இரங்கியழுதுமெத்தக் கிரங்கியதேவர்விண்ணில்
இருந்துமலர்மழைகள் பொழிந்தாரே.

(எ) படைகள்மடிந்திடக்கண் டடற்றாரகன்றன்னுள்ளம்
பதறிக்கண்பொறிசிந்தத் துடித்தானே - பின்னும்
வடவிலையிற்றுயின்ற நெடியோன்மீதிலிரத்த
வாரிசோரக்கணைவிட் டடித்தானே.

(அ) வானத்தினில்நீருண்ட மேகத்தினிடையந்தி
வானத்தொளிசிறந்திட் டதுபோலே - நறுந்
தேனுற்றமலர்மங்கைபாகத்தனுருவம்
சிவேலென்றொளிமிகுந்தா னதனாலே.

(௯) நீலவண்ணனிவ்விதம் நாலுதினம்வரைய
னேகவிதஞ்சமர்கள் புரிந்தானே - தேவ
காலன்தாரகன்சலியாமற் சண்டைசெய்துபின்
கணக்கில்லாதசரங்கள் சொரிந்தானே.

(௰) பாரளந்தவன்கோடிபாணந்தொடுத்துவஞ்சன்
பரிதேர்வில்லையுமண்ணிற் பொடித்தானே - கடுங்
காரவுணன் வெகுண்டு சீறிக்கர்ச்சனைகொண்டு
கதையைத்தன்கரத்தினிற் பிடித்தானே.

(யக) பிடித்தவனெதிரில்வந்தடிக்குமுன்னம்புவிட்டுப்
பெலத்தகதையைத்துண்டாய் முறித்தானே - முறித்
தடுத்துப்பின்னுமாயன்சக் கரத்தைவிடுக்கக்கண்டத்
தணியென வேதாரகன் தரித்தானே.

தேவருலகமுதலிய உலகங்களை ஜயித்தல்.

விருத்தம்.

ஆனையுரி தரித்தசிவ னருளைப் பெற்ற
வவுணனுனக் கிணையாரென் றியம்பி யின்ப
மானபல துதியொடுசூ ரனையும் வாழ்த்தி
யவனியிலுங் களைச்சயிக்க முடியா தென்றே
தேனுறுபைந் துளவனும்பாற் கடலை நாடிச்
சென்றனனப் பாற்சூர னரியை வென்றேம்
வானவரைச் சயித்தனமக் கரிதோ வென்று
மதித்திட்டான் வானுலகிற் குதித்திட் டானே. (சரு)

(நரு) கீர்த்தனம். இராகம் - கல்யாணி—ஆதிதாளம்.

பல்லவி.

சூரனிரதமிசைபடையொடுஞ்சென்றானே - பொன்னுலகென்னும்
சொற்கங்கள் முதற்பல - திக்கெங்கும்வென்றானே

அனுபல்லவி.

வீரமுடன்விருது கூறிமதமிகுந்து
விக்ரமங்கள்பாராட்டி - வக்ரதந்தத்தைக்காட்டிச் (சூரன்)

(க) ஓங்குமுகில்களையும் ஆங்குறுந்தேவரையும்பிடித்து - ஆடுமாடுபோல்
ஓட்டிவிலங்குகளை மாட்டிச்சிறைக்கூடத்திலடித்து - வருத்தஞ்செய்ய
ஏங்கிமிகவும்பய மோங்கியமரர்கண்ணீர்வடித்து - நிற்பதனைக்கண்
டிந்திரனும்பயந்து வந்துபணிந்துநயம்படித்து - சூரனைநாடித்
தாங்கினவுடன்சினம் நீங்கியமரர்சிறை
தறித்துவேலைகள்செய்ய மறுத்துத்தரங்கொடுத்துச் (சூரன்)

(உ) உம்பருலகத்தைவிட் டம்புயனுலகினைநாடி - வரக்கண் [டஞ்சி
ஓட்டமாயெதிர்சென்றுன் பாட்டனென்றுறவுகொண்டாடி - துதிசெய் [துவில்
அம்பிரதமுங்கொடுத் தின்பமுடனேயுரையாடி - உபசரித்த [போதிற்
அயனுலகந்தனைவிட் டெர்மாயவனுலகிற்கூடி - கர்ச்சிக்கும்
செம்பொற்கருடன்மீதி லம்புயக்கண்ணன்வந்து
சிறந்தமுறைகள்சொல்லிப் புகழ்ந்திடவுமகிழ்ந்து (சூரன்)

[ன்று
(ரு) கர்த்தர்சிவனுலகை நத்தித்துணைவரொடுதேறி - வேகமாய்ச்செ
களிறுமதங்கொண்டாற்போ லுவகையொடுமமதைமீறி - வணங்கிநின்றங்
குற்றரனருளையும் பற்றண்டகோளமதிலேறி -கலித்ததைக்கண்
டுவந்துபூர்வதேவர்வந் துறவுசொல்லலுமன்புகூறி - அங்கவரோடும்
பத்துடனொருகோடி ருத்திரரையுங்கண்டு
பகுத்தவர்கதைபுகருரைத்திடத்துதிகொண்டு (சூரன்)

வீரமகேந்திர நகரைத் தனக்கு ராஜதானியாக அமைத்துச் சூரன் அரசுபுரிதல்.

விருத்தம்.

பெலத்தவுண ரிடர்புரியும் வகையைத் தேவர்
பெருமானும் பிரமனுமா யவனுக் கோத
வலுத்தவன்கீழ் வாழ்க்வெனும் பழமொழிக்கோர்
வழக்குமிலை யினியவ்வரை வணங்கிக் காலங்
தொலைத்திடுவோ மென்றவரோ டெழுந்து மாயோன்
துதித்திடக்கண் ளெமகிழ்ந்து சூரன் வானத்
தலத்துறையுந் தபதியனை யழைத்துத் தாரந்
தாக்கினு னகரமொன் றுண் டாக்கி னுனே. (சசு)

(நசூ) கீர்த்தனம். இராகம் - பைரவி---ஆதிதாளம்.

பல்லவி.

வீரமகேந்திரமெனும் பேர்வைத்தொருநகரம்
விதித்துச்சூரனரசுபுரிந்தானே

அனுபல்லவி.

தாரணியிலெண்பதா யிரழ்யோசனைவிஸ்தாரம்
தள்ஞ்செய்துதென்கடலில் அளவுசெய்துமங்நேரம்
ஏர்பெறுநவமணிச்சிலையால் மதிள்விண்மேலே
இசையும்படிவிதித்து விசுவகன்மாவினுலே (வீர)

சரணங்கள்.

(க) சிலமிகுங்கோட்டைக்கு - நாலுவாசலும்விட்டுச்
சிகரகோபுரங்களுந் துலங்கவே - திரை
வேலைபோலவேயகழ் - கோலுங்கிடங்கிலுற்ற
விடப்பணியநந்தனுங் கலங்கவே - செழும்
நீலமணியிழைத்தசித்ரகூடங்களோட
னேகமாடமாளிகை யிலங்கவே - எழில்
ஏலுமுபரிகையின் காலுஞ்சுதையைக்கயி
லையும்பாற்கடலுங்கண்டு மலங்கவே - வச்ரத்
தாலுபரிகையிற்சா ளரவாசலும் வகுத்து
தனிநவரத்நச்சிங்கா சனமுமுடனமைத்து
கோலமணிமுகப்பில் மகமேருவும்பகுத்து
கொலுமண்டபத்திற்செம்பொற்பலகணியுந்தொகுத்து (வீர)

(உ) மனுமுறைவேதஞ்சொல்லி முனிவரமரர்வந்து
மகதாசீர்வாதஞ்செய்யுந் தானமும் - கூடித்
தனியேமந்திரிகளுடன் இனிதுடனேமந்த்ராலோ
சனைசெய்மண்டபமுமாஸ் தானமும் - வா
சனைசேர்குழன்மங்கையர்நடம்புரியும்நாடக
சாலைமண்டபமுமுத் யானமும் - கட
லனையரதகஜது ரகதங்களுக்குநிரை
யானகொட்டகையும்வி மானமும் - மல்லர்
முனைவாள்பயிலுமரண் மனையிலங்காபுரியும்
முடிக்குறுஞ்சிங்கமுகன் றனக்கசுராபுரியும்
கனிநாவற்றீவிற்றூர கனுக்குமாயாபுரியும்
கணித்தகிலங்கள்முதல் அனைத்தும்துதிபுரியும் (வீர)

(ங) அஷ்டதிசையாயிரத்தெட்டண்டமும்புகழ
அசுரர்ஜெயஸ்தம்பங்கள் காட்டவே - தனக்
கிஷ்டமுடனமைச்சர்மட்டடங்காநவரத்
தினப்பொற்பணிகளெல்லாம் பூட்டவே - கோண
வட்டமெழுகடற்குட்பட்டதீர்த்தங்களெல்லாம்
வானவர்கொணர்ந்துநீ ராட்டவே - பன்னீர்
மட்டித்தகலவைச்சந்தனந்திமிர்ந்துவசந்தன்
மருமலர்கள்சென்னியிற் சூட்டவே - உயர்
சிஷ்டமறையோர்வேதகோஷமாச் வாரிக்க
செம்பொன்மணியிழைத்த கும்பஜலம்பூரிக்க
அஷ்டலெட்சுமிசிங்காசனத்தில லங்கரிக்க
அணிசேர்சுக்கிரன்கையால்மணி மகுடந்தரிக்க (வீர)

186142
926:447 1914

(௪) பைந்துளவனும்அயனும் துதிபுரிந்திரு
பக்கத்திலுவந்துகொண் டாடவே - பூர்ண
சந்த்ரன்குடைபிடிக்கத்தன தனடப்பங்கட்டச்
சாமரைவருணனும் போடவே - பணிந்
திந்த்ரன்காளாஞ்சியேந்தயமனங்குசன்கட்டியம்
இயம்பநாரதரிசை பாடவே - திகழ்
கந்தமலர்க்குழலரம்பையரபிநயங்
காட்டிமயிலெனநின் றூடவே - நிதம்
அந்தணனைப்பஞ்சாங்கம்சொல்லென்றருளிநோக்கி
அருக்கனிளங்கதிராயிருக்கக்கட்டளை தாக்கி
இந்துவைப்பூரணமாயிருவென்றுத்தர வாக்கி
எமவாதையன்றிநீக்கியாவும்தன்வய மாக்கி (வீர)

சூரபத்மன் முதலியோர் விவாகம்.

விருத்தம்.

அக்கினியைப் பணிபுரிந்து குளிர்ச்சியொடு மிருப்பாயென் றறிக்கைசெய்து
அநிலனையந் நகர்வீதிக் குப்பையெலாங் கூட்டிவிள மாக்கச்செய்து
மைக்கடல்வாய் வருணனையவ் வீதியிற்பன் னீர்தெளித்து வருகச்செய்து
வன்கணசு ரன்றெய்வ கம்மியன்பெண் பதுமகோ மளையோடின்னஞ்
சொர்க்கவுல கத்திலுறை கின்னரர்கிம் புருடர்முதற் றொகையிலாத
தோகையர னேகரைத்தான் மணம்புரிந்து சிங்கமுகச் சூரனுக்கு
வக்கிரகா லன்மகளாம் விபுதைதனை மாலையிட்டு மதஞ்சேர்தந்தி
மாமுகன்று ரகன்றனக்கு நிருதிமகள் சவுரிதனை மணஞ்செய்தானே (௬௭)

பல அண்டங்களுக்கும் பல அசுரரை அனுப்பிக் காவல்புரிதல்.

வெண்பா.

மாமணங்கள் சூடி மகிழ்ந்துதம்பி மார்களுடன்
சேமமிகு சூரன் தன் சேனைகளை - யேமமுட
னேக்கியுங்கள் பாளையம்விண் ணோர்நடுங்க வண்டமெலாங்
காக்கவென்று சொல்வான் கடிந்து (௨)

(௧௭) கீர்த்தனம். இராகம் - அடாணு—ஆதிதாளம்.

பல்லவி.

அண்டங்கள்யாவுக்கும் துண்டுதுண்டாகக்காவல்
அமைத்தானேசூரன்

அனுபல்லவி.

கண்டகனானசிங்கமாமுகனுக்குவட
கடலசுரபுரத்தைக்கனகமகுடஞ்சூட்டி
விண்டலநடுங்கஇரண்டிலக்கவெள்ளங்கள்
விரிந்தசேனைநிறுத்தி - நிறைந்தணியாய்ப்பொருத்தி (அண்டம்)

சரணங்கள்.

(௧) ஆனைமுகத்தவுணன் றனக்குமாயாபுரியை
அஷ்டதிசையறியப்பட்டமுங்கட்டிவைத்துச்
சேனையிரண்டிலக்கவெள்ளந்தொகைகொடுத்துத்
திரண்டுவிண்ணினிற்படர்ந்திருண்டமேகம்போல்வைத்து (அண்டம்)

(௨) ஆழியகடல்சூழ்கீழ் ஏழுலகங்களுக்கும்
ஆடரங்காயெண்ணூறுகோடிசேனைவிடுத்துத்
தாழும்புவியதன்மேல் ஏழுலகங்களுக்கும்
தகுந்தசேனை விடுத்துப்பகர்ந்துத்தரங்கொடுத்து (அண்டம்)

(௩) சகலபுவனங்களுமிகவுந்தன்னுக்கினையுள்
தாக்கியோர்பகையின்றி நீக்கிவியனுலவு
சிகரகோபுரவாசல் ஒவ்வொன்றுக்கிருகோடி
சேனைகாவல்வகுத்துத் தானுங்கெடிமிகுத்து (அண்டம்)

தேவர்களைத் தினந்தோறும் மச்சம்பிடித்துக்கொண்டு
வரச்சொல்ல அவர்கள் வருந்தல்.

விருத்தம்.

வக்கிரகா லன்றரும கோபன் சிங்கன்
மகிடனிகற் சங்குபா லன்றீக் கண்ணன்
துற்குணனா தியவமைச்ச ரோடுசூரன்
சூட்சிசெய்து தேவர்களை நோக்கி நீங்கள்
மைக்கடலிற் தினந்தொறுமீன் பிடித்துக் கொண்டு
வருவீரென் றுரைத்திடலு மமர ருள்ள
முக்கியவ ரவர்கள்தங்கள் விதியை நொந்தே
யுருகுவார் வெளியில்வந்து மறுகு வாரே (௧௮)

(௩அ) தீபதை. இராகம் - யமுனகல்யாணி—ஆதிதாளம்.

(௧) ஐயய்யோஇதற்குநாமென்செய்குவோமிந்த
அவதிக்குள் ஆனேமே - கையால்
அரிசியென்றுமுமியென்றள்ளியூதிப்பார்ப்பாரில்
லாமலே போனேமே.

(௨) தையலர்சூழ்ந்துஜந் தருவினிழலிற்குடை
தான்பிடித்ததும் போச்சே - இந்தத்
தறுகணசுரனுக்குப் பயந்துகடலின்மீன்
ரூன்பிடிக்கவு மாச்சே.

(௩) மட்டித்தனமாய்ப்பேய்க்கு வாழ்க்கைப்பட்டுப்புளிய
மரத்திலேறினற் போலே - இப்போ
வந்ததேயிந்தவிதி அந்நாளில்நமது
வாயின்மதத்தி னலே.

(௪) கோபமாய்நந்தியிட்ட சாபந்தானும்பிடித்துக்
கொழுந்துவிட்டுப் படர்ந்ததோ - அது
கோரவசுரரென்ற ரூபமெடுத்துநம்மைக்
குடிகெடுக்கத் தொடர்ந்ததோ.

(௫) அடிக்குப்பெரியமடர் உண்டோதுன்பமிதை
யாரிடத்தினிற் சொல்லுவோம் - நம்மை
ஆவென்றலறவிட்டதேவகண்டகனு
னவனையெப்படி வெல்லுவோம்.

(௬) அயன்முதலோர்கள்சாப மாகிற்பரமனைக்கண்
டடுத்தொழித்திட லாமே - அகி
லாண்டநாயகனுலே மூண்டசாபமிதற்கு
யாருடன்சொல்வோம் நாமே.

(௭) குடத்துநீர்கொதித்திட்டாற் குளத்துநீர்தனைக்கொண்டு
குளிரச்செய்வது பாயம் - கடல்
கொதித்தெழுந்ததிர்த்திட்டா லாற்றவும்வசமுண்டோ
கொடுமையிதென்ன மீயம்.

(௮) மாசிலீசனைமுன்பு எசிநாமனைவரும்
வாய்மதஞ்சொன்ன போதே - இன்னும்
வரும்விதியதுவந்தாற் படும்விதிதனைப்பட
மாட்டோமென்றால்வி டாதே.

சூரபத்மனுக்குப் பிறந்த முதல் மகன் தான் பிறந்தவுடன் சூரியனைத் தொட்டிலில் கண்ணாடியாகக்கட்டி பானுகோபனென்னும் பேரடைதல்.

விருத்தம்.

தேவரிந்த விதம்புலம்பிக்கடன் மீன் கொண்டு
தினந்தொறுஞ்சூ ரனுக்களித்து வருமந்நாளிற்
பாவியவுணன்மனைவி கோமளைக்குப்
பருவயிற்றிற் கருவுதித்தந் தகனைப் போலப்
பூவிலொரு மகன்பிறக்க மகிழ்ந்து சூரன்
பொன்மாரி நகர்முழுதும் பொழிந்து வாழ்த்திப்
பூவலர்பொற் பணியணிகள் சேய்க்கு நன்றாய்ப்
பூட்டினன் றொட்டிலில்வைத் தாட்டி னனே (சக)

(நகக) சந்தத்தரு. இராகம் - அமீர்கல்யாணி—ஆதிதாளம்.

தொட்டிலில் வளர்சிறு புதல்வனு தித்தெழு
சூரிய னைக்கையி னற்
றொட்டுட னுடியெ னக்கதி யோடுயர்
துயில்புரி பாயலி னேர்
கட்டலு மயன்முத லோர்கள்ப யந்திது
கழறிட வங்கெதிர் சூர்
கண்டுந லஞ்சொலு மென்றலும் வந்திகல்
கதிர்ப்பகை யெனநாம
மிட்டய னொருபிர மாத்திர மீந்திர
வியினிடர் நீக்கினன்மூ
வெண்ணுடை தற்கின மூன்றுச கத்திர
மிளவலு தித்தனர்மேற்
சட்டமொ டரிமுக னுக்கொரு சேயொடு
சதமரு தித்தனர்மா
தாரக னுக்கசு ரேசனெ னும்மொரு
தனயனுதித்தனனே.

அஜாமுகி துர்வாஸரிஷியுடன் பலவந்தமாகச்சேர்ந்து வில்வலன் வாதாபி என்ற இரண்டு புதல்வர்களைப் பெறுதல்.

விருத்தம்.

மைக்கனைய நிறத்தவுண ரிவ்வாறு மைந்தர்பெற்று
மகிழ்ந்தாரப்பான்
முட்கரவ யாமுகிக்குக் காமவெறி தலைமண்டை
மூளைக் கேறிக்
கட்குடித்துப் பேய்பிடித்துத் தேள்கடித்த வானரம்போற்
கானிற் சென்று
அக்கணமே தவஞ்செயுந்துர் வாசனைப்போய்த் தொடர்கின்று
ளடர்கின் றாளே. (௩௰)

(௬௰) கீர்த்தனம். இராகம் - சௌராஷ்டிரம்—சாப்புத்தாளம்.

பல்லவி.

மாயத்தொழில்கொண்ட - ஜாமுகியுந்துரு
வாசனைச்சேர்ந்தணைந்தாளே

அனுபல்லவி.

ஆயவெஞ்சூரற்கி - ளையவளானசண்
டாளிரெணபத்ர - காளியைப்போலதி (மாயத்)

சரணங்கள்.

(௧) அக்கினிகுண்டத் தெரியெனவானிலு
லாவுமயிர்ச்சிகை முடித்து - முனை
வக்கிரதந்தத்தைக் - காட்டியுதட்டை
மடித்துறிஞ்சிப்பல்லைக் கடித்து - எழில்
இக்குமலர்க்கணைதைக்கும் விஷம்தலைக்
கேறிமதனப்பேய் பிடித்து - இரு
பக்கவிலாவும் புடைக்க வொராயிரம்
பானைநிறை கள்ளுங் குடித்து - உறு
மிக்கொண்டொருமலை போலே - நின்ற
மிண்டாளி தன்னைக்கண் ணாலே - கண்டு
வெருவியக்கணமே யும்பர்கள்
வித்னமுற்றடடாவென்றுயிர்
பரதவித்திடவே நெஞ்சிடை
படிறுமெத்தவுமே மிஞ்சிய (மாயத்)

(உ) மாதவர் கூடியிருக்கும் வனத்தினில்,
மாவேகமாகவந் தடுத்து - அங்கே
வேதியர்கள்மறை - ஓதிமகஞ்செயும்
வேதிகையாவையுங் கெடுத்து - பிர
சாத அவிர்ப்பாக ஓதனந்தன்னைப்பி
சாசங்களுக்குண்ணக் கொடுத்து - பரும்
பூதமெனத்துரு - வாசமுனியைப்
புறம்போகவொட்டாமல் தடுத்து - பிரும்ம
காதகனும்சூரன் தங்கை - உன்மேல்
காதல்கொண்டுவந்த நங்கை - என்றும்
கரணவித்தையிலே புளகித
கரமிகுத்திடவே நவரஸ
சுரத அற்புதமாவு பரதி
சுகமளித்திடுவே னெனமிகு. (மாயத்)

(ங) வண்டப்பிடாரியென் - றண்டையில் நின்றபன்
மாதவர்கண்டோடி ஒதுங்க - லோக
கண்டகியான அரக்கிவர என்ன
காரணமென்றுநெஞ் சதுங்க - அண்ட
பிண்டத்தை நீறுநீறுக்கும் துர்வாதனும்
பெட்டியிற்பாம்புபோல் பதுங்க - எதிர்
முண்டியுடன்கட்டிக் கொண்டாளையையோ
முனிக்கிருகண்விழி பிதுங்க - கைக்க
மண்டல நீரையும் கவிழ்த்து - காவி
வஸ்திரத்தைக்கையா லவிழ்த்து - பல
வந்தமாகவளைந்துமே விசை
மண்டலாகிருதி கொண்டுமே புவி
யந்தராதிபருந்திகிலென
அஞ்சிவாடிவிரைந்துமோடிட (மாயத்)

(ச) பாகத்துடன்வள - மாகத்திரட்டிய
பாலுங்குமட்டுவ துண்டோ - கனு
வாகிய கட்டிக்கரும்பையருந்திடக்
கைக்கூலிவேண்டுவ துண்டோ - இன்ப
மாகவேயென்தன் ஸம்போகங்கிடைத்தபின்
மற்றோர்தவப்பய னுண்டோ - ஆவி
தேகமிரண்டுமொன்ருகி விட்டோமினிச்
செல்லும்வகையுமக் குண்டோ - எனப்

பாமரைவாயகம் படித்து - இனிப்
பூரெனவேநொடி நொடித்து - மிகு
பறபறப்புடன் - இடிமுழக்கொடு
பலவிசித்திரமது விளைத்திள
முறுவலக்கினியென வெழச்சின
முனிவனுக்கொருகிலி பிடித்திட (மாயத்)

அவ்விருவரும் தூர்வாஸரிஷி சாபத்தைப்பெற்று தபசியரை வதைத்துண்ண அயனிடம் வரம் பெறல்.

விருத்தம்.

அக்குமணி வடஞ்சிதற அணிமணிக்குண் டலமுதிர அந்திவானச்
செக்கர்நிறச் சடைகுதறத் திருமுனிகோ வெனக்கதறச் சேர்ந்தணைந்த
அக்கணம ஜாமுகியும் வில்வலன்வா தாபியைப்பெற் றகமகிழ்ந்தாள்
தக்கமைந்தர் தாய்மொழிகேட் டகங்கொள்வார் தந்தைமுன்வா சகம்விள் வா
[ரே (ருக)

(சக) தீபதை. இராகம் - பியாகடை—ஆதிதாளம்.

(க) சல்லியர்களாகிய - வில்வலன்வாதாபியும்
தந்தைபதம்பணிந்து நின்றாரே - நின்ற
செல்வரைநோக்கியுங்கட்கென்னவேண்டுமதனைத்
தெரியநமக்குச்சொல்வீ ரென்றாரே

(உ) இதுவரைக்குந்நீர்செய்த - தவமனைத்தையுமெங்கட்
கீந்திடவேண்டுமென்று கூறினர் - வே
றெதுகேட்டாலும் தருவோம் கதிதவம்தரமாட்டோம்
என்று தூர்வாஸமுனி சீறினர்

(ங) அதிர்த்திருவர்க்கும் வாய் - மதத்தாலழியக்காலம்
அடுத்துமுனியை வெடு வெடுத்தாரே - நீங்கள்
மதித்தகஸ்தியர்க்கிடர் - விளைத்தவராலேநாச
மாய்ப்போவீரென்றுசாபங் கொடுத்தாரே

(ச) சாபம்பெற்றிருவருமேவியயனைப்பன்னித்
தவசியர்களைவதைத் துண்ணவே - எண்ணி
மாபத்தியாகச்செய்யும் யாகத்திலே தம்பியை
வதைத்தக் கினியிலோமம் பண்ணவே

(கு) சதுர்முகன்பின்னையு மங்கெதிர்வர்ரதிருக்கத்தன்
சதையையறுத்தழலில் சொரிந்தானே - அபரன்
எதிர்வந்துடன் தம்பியை - எழுப்பி வில்வலன்றனக்
கிசைந்தவரமுமருள் புரிந்தானே

(சு) அழைத்தவுடனே தம்பி - வரவுமாதவர்களை
அறுத்தருந்தவும் வரம் பெற்றானே - பின்பு
வழிக்கொண்டுடனே சூரன் றனைக்கண்டடிபணிந்துன்
மருமகனென்றெதிர்போ யுற்றானே

(எ) கண்டுமகிழச்சூரனண்டையினிற் சிலநாள்
கழித்துக்குடதிசையை மேவியே - வளங்
கொண்டகனி விருட்ச முண்டுபண்ணியே மாயங்
கொண்டு முனிவர்களைக் கூவியே

(அ) அவதந்த்ரம் செய்வதற்கு - நிமந்த்ரணமென் றழைத்து
அநுசனையசமாக்கி வீட்டியே - நன்றாய்ச்
சிவந்தகறி சமைத்துத்தவஞ்செயும் வேதியர்க்குத்
திருத்தியாகவே விருந் தூட்டியே

(கூ) பின்பு வில்வலன்றானுந் தம்பியைக்கூவக்குடல்
பிளந்தவனண்ண னெதிர் குதிக்கவே - மாண்டோர்
என்புதிரங்கள்சதை - யாவையும் பக்குவஞ்செய்
திருவர்களு முண்டுட லுதிக்கவே

சூரன் இந்திராணியை மருவ எண்ணங்கொண்டு இந்திரனிடம் தூதரை யனுப்ப இந்திரனும் இந்திராணியும் குயிலுருவங்கொண்டு தேவலோகத்தைவிட்டு பூலோகத்தில் சீகாழியில் ஈசனை வழிபடல்.

விருத்தம்.

பாவியரிப் படியிருக்கப் படிமிகுவெஞ் சூரன்
பரிவுடனிந் த்ராணிதனை மருவவெண்ண மீறித்
தேவருல கிறைவனிட மசுரர்களை யேவத்
தெரிந்தவனிந் த்ராணியொடுங் குயிலுருக்கொண் டொளித்தான்
காவுறைதந் தையைநினைந்து சயந்தனழு தேங்கக்
கண்டுமுனி நாரதனுந் தேற்றவவன் றெளிந்தான்
பூவுலகி லிந்திரன்சீ காழியடைந் தரனைப்
பூம்பொழில்வைத் தங்கிருந்து பூசனைசெய் தனனே. (௰௨)

OFFICE OF THE REGISTRAR REGISTERED 26 MAR 191 MADRAS

(சஉ) கீர்த்தனம். இராகம் - சேஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

பூஜை செய்தனனே - இந்திரன் சீகாழியிற்
பூஜை செய்தனனே.

அனுபல்லவி.

தேசுறமெய்முழுதுஞ் சிறந்தபூதிகண்டிகை
மாசறவணிந்துகை - மாமுகனடி - மாமலர்கருதியே சிவ (பூஜை)

சரணங்கள்.

(க) ஐதிகப்படிமக தாபிஷேகமியற்றி
ஐதிகழுமைபங்கா - அரகரசங் - கரவெனஉரு - கியே சிவ (பூஜை)

(உ) கூவிளம் பாரிஜாதங் கொழுந்து மருமல்லிகை
நீவரசமுதலாய் - நிறைமலர்கொண் - டிறைமலரடிதனைநிதம் (பூஜை)

(ங) அஞ்சக்கரந்தனைத்தன் - நெஞ்சத்துறச்செபித்து
வஞ்சமின்றியேயேக - மனதொடுநின் றினிதொடு பரவியே சிவ(பூஜை)

(சங) பின்னும் கீர்த்தனம். இராகம் - பியாகு—ரூபகதாளம்.

பல்லவி.

ஶம்போ ஜகதீஶா-ஶிவ-ஶம்போ

அனுபல்லவி.

அம்புஜநாபாத்யமரஜாதார்சிதபத—ஶம்போ

சரணங்கள்.

(க) தேஜோமயாகிலபுவந திவ்ய கருணா
ராஜஹம்ஸகநவாவந்தித சரண ஸுந்தரா—ஶம்போ
வந்திதஸர்வஹாரிபாபாவாரணாகர - ஶர
திந்துகருணாகரவரஶம் கரக்ரு வர்கர—ஶம்போ

(உ) ஒறுத்தவுணர்கள் துறத்திடத்துடித்
துலேந்த லேந்தேனே - கொள்ளை
பதித்தென்னுலகைக்கொளுத்திடல்கண்டு
பதறி வந்தேனே. (சம்போ)

(௩) வருக்கமுஞ்செல்வப் பெருக்கமுமரு
சிருக்கையும் போச்சே - எங்கள்
செருக்குலேந்துதா மரைப்புனலெனத்
தியங்கவு மாச்சே (சம்போ)

(௪) புனற்கடல்கரை கடந்தாற்புவி
பொறுக்க முடியுமோ - இவ்வி
தனக்கடலினி லமிழ்ந்தவெந்துயர்
தணிந்து விடியுமோ (சம்போ)

சூரன் தூதர் இந்திரனைத்தேடிச் சீகாழிக்குச்செல்ல அப்பொழுது இந்திரன் வேயுருவாகி சீகாழியில் ஈசனைப் பூசித்தல்; நாரதர் கலகத்தால் சூரிய சந்திரர்கள் மறையும்படி ஆகாயத்தில் வளர்ந்து பூமி இருளடையும்படிசெய்த விந்தமலையை யடக்க அகஸ்தியர் சிவனை நோக்கித் தவம்புரிதல்.

விருத்தம்.

பொன்னகர்க் கிறைவ னின்னவா றிரங்கிப் பூசனை புரிந்திட வானிற் [ந்தா
புனிதனே மயங்கா யெனவொரு வாக்குப் பொலிந்திடத் தெளிந்தவ னிரு
னன்னபோ தசுரன் றூதர்போய்க் காழி யடுத்திட வேயுரு வாகி
யன்புடன் சிவனைப் பூசைசெய் திருக்க வருண்முனி நாரதன் றூனுங்
கன்னன்மா வனஞ்சூழ் விந்தமுன் மேவிக் கலகஞ்செய் திடலுமவ் வரையக்
கணமெழுந் துயர்விண் கதிர்மதி யுலகைக் கவர்ந்திடப் புவியிரு ளுறைய
மன்னிய தேவ ரனைவரு மயங்கி வடவரை யடைந்தகத் தியன்பால்
வழுத்திடத் தெரிந்தம் முனிவனும் பரமன் மலரடி தொழுதிருந் தனனே.
(௫௩)

(௯௪) கீர்த்தனம். இராகம் - சகானு—ஆதிதாளம்.

பல்லவி.

ஞானநிஷ்டையிலிருந்தார் - கும்பஸம்பவர்
ஞானநிஷ்டையிலிருந்தார்

அனுபல்லவி.

வானுலாவுமுயர் வானமேருதனில்
வாஸமாக ஈசர்நேச மகலா - ஞான

சரணங்கள்.

(௧) காடுமேடின்மன மூடுருமல்நெடுங்
காலமாக ஞாலமோக மடரா (ஞான)

(உ) தாவராதிதனில் மேவுருதிலகு
தானதான் மோனயோகி அழியா (ஞான)

(ங) வேலையோலமிட வேலைவாய்புகுத
விட்டசிட்டர் வட்டமிட்ட சிலைபோல் (ஞான)

(ச) தேவர்மாமுனிவர் தாபமோடுருக
சித்தமுற்றுசுத்தசித்தர்வடிவாய் (ஞான)

அகஸ்தியர் விந்தத்தையடக்கும் வலுவையும் காவிரி நதியையும் ஈசனிடம்பெற்று வருமார்க்கத்தில் கிரவுஞ்சனை மலையாகிக் குமரக்கடவுளாலழிகவெனச்சபித்து விந்தமலையைப் பாதலத்திலழுத்தி வில்வலன் வாதாபியை அழித்தல்.

விருத்தம்.

அடியவ ருளத்தி லமர்ந்திடும்பரம னக்கண முனியெதிர் தோன்றி
யடலுறும் விந்த மலைதனை யடக்கு மானமெய் வலிமையுங் கொடுக்க
விடையவன் பொற்று ளிடையரு வன்பின் மிகுந்திடு தமிழ்முனிபின்னும்
வேண்டிய படியேழ் விழுநதி களிற்கா விரிதனை நோக்கியம் முனிவன்
கடமதி லடங்கித் தொடர்ந்துநீ செல்லக் கடனென வாடவர் பின்னே
கன்னிய ரேகத் தகாதென வணங்கிக் காவிரி யுரைத்திடச் சிவனும்[ஞன்
வடங்கொள்பூண் முலையா யகத்திய னெனைப்போன் மாசிலா மனத்தனுதலி
மயங்கலீ தென்னப் பகர்ந்தரன் மறைந்தான் வரநதி கடத்திலுற்றனளே
(கச)

(சரு) தீபதை. இராகம் - புன்னுகவராளி—ஆதிதாளம்.

(க) தமிழ்முனிவன்றன் கடத்தில் - காவிரி
தனையுங்கொண்டுதென்றிசை வருமிடத்தில் - அங்கே
அமையுங்கொடியக்ரவுஞ் சாசுரன்கண்டானே
இமயம்பல்கந்தர மெனரூபங்கொண்டானே

(உ) கொண்டவனெதிர் நண்ணியே - இதத்தொடு
குத்திரஞ்செய்ய வென்றுக - ருத்திலெண்ணியே - எனை
அண்டிநீர்விந்தகிரிக் கடுத்திடுமென்றுசொல்ல
குண்டிகைமாமுனிவன் குறித்தந்தவழிசெல்ல

(ங) நடவையுந் தெரியாமல் - மெத்தவுள்ளம்
நலிந்து மெலிந்துவகை பிரியாமல் - நேரில்
அடர்பாலைவனத்தழ லதனைக்கண்டுபுயங்க
விடமணிகண்டனன்பன் மிகவுமதிமயங்க

(ச) கனலிடிகளும் நிறைய - விசும்பெங்கும்
கங்குன்மயமாகிச்செக மெங்குபறைய - முனி
சினமடங்கியேஞான திருஷ்டியால்மதித்தானே
வினையக்ரவுஞ்சன்மாய மெனக்கோபங்கொதித்தானே

(ரு) கதித்தசுரனைப் பார்த்து - முனிவன்கடைக்
கனலென விழிப்பொறி கடுந்தார்த்து - என்றுஞ்
சதிக்கிருப்பிடமாகித் தடச்சிலையுருவாகி
மதிக்குகன்வேலால்மடிந் திடச்சாபங்கொடுத்தேகி

(சு) பாதைவழியைக் கூடி - கங்கையிற்
படிந்தரனடிபணிந் தருள்தேடி - எதிர்
வாதங்கூறியவிந்த மலையைக்கைக்கொண்டுதாக்கி
பாதலந்தனின்மிகப் பதுங்கும்படிக்குப்போக்கி

(எ) அந்தமலையைக் கடந்து - வருகையில்
அசுரன்வில்வலன் வாதாவியுந்தொடர்ந்து - இவன்
முந்தக்கடல்குடித்து நந்தமர்களைக்கொன்று
வந்தபழிக்குப்பழியுந்தரவேணு மென்று

(அ) மாமுனிதனை யடைந்து - இன்றைக்கிரை
வாய்ச்சுதென்றிருவர்மண்டைப்பூச்சிகுடைந்து - அதி
நேமவைதீகன்போல வேபணிந்தெதிர் நின்று
ஆமின்றதிதிபூசைக் கருள்செய்யவேணுமென்று

(கூ) பாமரத்தன்மை யாலே - மோசஞ்செய்ய
பசுவுரிபோர்த்தியபுலிபோலே - துட்ட
னுமவன்சொன்ன துண்மையாமெனமதித்துமுன்
ஓமெனவேமுனிவனுகந்துசம்மதித்த பின்

(௰) தம்பியையச மாக்கி - வாள்கொண்டு
தறித்துயிர்தனையமன்வசமாக்கி - மிகு
வம்பாகவே பலவிதங்கறி சமைத்தானே
சம்ப்ரதாயமாய்' முனிதனையுண்ண மதித்தானே.

(௰க) விருந்துண்டம்முனி தழைக்க - முன்போலே
விரும்பிவாதாவி வாவென்றவ னழைக்க - வயிற்
றிருந்துதம்பிகர்ச்சனை யிடமுனிவன் வெகுண்டு
திருந்துமந்திரஞ்சொல்லச் சீர்ணமானது கண்டு.

(௨௪). வில்வலன்மனந் துடித்து - முகம்வெடு
வெடுத்துமுனிவன்றனைப்போய்த் தடுத்து - நின்னைக்
கொல்வேனெனலுங்கையாற் குசைகிழித் தெறிந்தானே
வில்வலனிருகூறாய் விழுந்துட னெரிந்தானே.

அசுரர் ஆணையால் மழைபெய்யாதுவாடிய நந்தவனம் தழைக்கும்பொருட்டு இந்திரன் விக்னேசுவரரை ஆராதிக்க, அவர் காக்கை வடிவாக அகஸ்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைப் பெருகச்செய்தபின் அகஸ்தியர் அக்காக்கையைத்துரத்த, கணேசர் ஓர் பிரமசாரி வடிவங்கொண்டு நிற்க அவரைத் தலையிற்குட்ட அகஸ்தியர் அணுக அவர் தன் சுயரூபங்காட்டித் தெரிசனமளிக்க அகஸ்தியர் விநாயகரைத் துதித்தல்.

விருத்தம்.

தாரணியிற் கெடுவாய்கே டெண்ணு தேபின்
தனக்குவரும் பெருங்கேடென் றுரைக்கு முன்சொற்
பேரதுபோல் வில்வலன்வா தாபி மாண்டார்
பிரமகத்தி முனிவனைச்சூழ்ந் திடப்பெம் மானை
யாராத னஞ்செய்தப் பழியை நீத்தா
னமரர்கோ னிடத்தினிநா ரதனுஞ் செல்லத்
தீராத துயரமுந்தன் வனம்நீ ரின்றித்
தியங்குவதுஞ் சொல்விமதி மயங்கி னனே. (௫௫)

பின்னும் விருத்தம்.

இந்திரனிவ்வா றிரங்கநா ரதன்பி னியம்புவா னைங்கரன் றனைநீ
யிணையடி தொழுது பூசனை புரிந்தால் யாவையும் பெறுகுவா யென்ன
அந்தவா றவனும் பூசனை புரிய வைங்கரன் காகமாய்க் கொங்கி
லகத்தியன் கமண்ட லந்தனைக் கவிழ்க்க வரிவைகா விரியுநீர் பொங்கிச்
சந்தமா வனங்கள் செழிக்கவோர் நதியாய்ச் சார்ந்திடக் குணதிசை நோக்கித்
தமிழ்முனி சினந்தக் காக்கையைத் துரத்தச் சதுர்மறை யவனென நிற்கச்
சிந்தையிற் கூடிய வேகமா யோடிச் சிரமதிற் குட்டவென் றெட்டச்
சிந்துர முகத்தோன் தெரிசனங் கொடுக்கத் திருமுனி தொழுதிறைஞ்
சினனே (௫௬)

(சகூ) கீர்த்தனம். இராகம் - புந்நாளா—ஆதிதாளம்.

பல்லவி.

கஜமாமுகனே யெனையாண்டருள்வாய்

அநுபல்லவி.

நிஜமாயுனதம் புஜபாதமலால்
நெறிமற்றவைநான் அறியேன் சிறியேன் (கஜமா)

சரணம்.

அலைகொண்டகமண் - டலநீர்வழியப்
பலலீலை செயுன் பரிசை மொழிய
நிலைமேவிய கண்ணிறை நீர் பொழிய
நலமாய்த்தொழுதின்னலை நானொழிய (கஜமா)

அகஸ்தியர் விக்னேசுவரரிடம் வரம் பெற்று குற்றாலம் சென்று அத்தலத்தில் கோயில்கொண்டிருந்த மஹாவிஷ்ணுவைச் சிவலிங்கமாக்கல்.

(சஎ) திபதை. இராகம் - பூகாரி—ரூபகதாளம்.

(க) கணபதியைத்தனியே - போற்றிக்
கழலிணையிற்கனியே - வைத்துக்
காவிரிப்புன லேயெடுத்தபி
ஷேகமெய்ப்புட னேநடத்தியே

(உ) மணமலர் மெத்தவுமே - மிக
அணிபெற உத்தமமாய் - மறை
ஆகமப்படி யேயருச்சனை
நேமகத்துட னேமுடித்தபின்

(ச) பணிசெய்துநெற்றியிலே - அதி
வடிவுற மத்தியிலே - குட்டி
யேமனுச்சொலி யேதுதித்திட
வேமதக்களி றேர்முகத்தினர்

(ரு) கரகமதைக்கவிழ்த்தோ - மெனப்
பரிவுடன்வித்தகனு - ருனைப்
போலெனக்கெதி ரேநுதற்குட்டி
யேதுதிப்பவர் வாழ்வுபெற்றிட

(சு) வரமுமளித்துவிட்டோம் - என
உரைசெயமுத்தமிழோன் - கையில்
வார்கடத்தினி லேகவிழ்த்தநீ
ராறெனக்கடல் சேரவப்புனல்

(எ) கருதிநிதம்படிவோர்க் - கிஷ்ட
காமியசித்தியெலா - முட
னேபலித்திட வேயனுக்கிரக
மேதரச்சொல வேயளித்துடன்

(அ) கரிமுகன்சென்றிடவே - முனி
களிகொண்டெழுந்துடனே - குற்
றாலமெய்ப்பதி மேவியேவிஷ்ணு
வாலயத்தினி லேகமிக்கவே

(௯) புரகடமுற்றவரா - யுள்ள
விரதவயிணவர்கள் - எங்கள்
கோயிலுக்குளே நீபுகச்சரி
யோவெனச்சொல வேமறைந்துடன்

(௰) திருநுதன் மத்தியிலும் - உரம்
திறல்புய முற்றிலுமே - செய்ய
துவாதசத்திரு நாமமிட்டரி
நாமகர்ச்சனே யேமுழக்கவே.

(௰௧) பரவிவயிண வர்கள் - தொண்டு
பணிவிடை செய்துடனே - தங்க
ளாலயத்தினி லேசெலச்சொல
வேயஞ்சக்கர மேசெபித்துடன்.

(௰௨) குறுகுறு குற்றாலனே - எனக்
குறுமுனி கைத்தலமே - வைத்த
போதிலக்கண மேமலர்க்கண
ஞதிமெய்ச்சிவ ஞகவுற்றனனே.

இந்திரன் சீகாழியிலிருந்தபொழுது தேவர்கள் அவனிடம் வந்து முறையிடல்.

விருத்தம்.

சீதரனைச் சிவலிங்க மாகச் செய்து
திருக்குற்றா லத்தைவிட்டுப் பொதிகை சேர்ந்த
வேதமுனி கமண்டலத்தி லெழுந்த பொற்கா
விரிநதிசெண் பகவனங்கள் செழிக்கப் பாயப்
போதலர்கொண் டரனைநிதம் பூசை செய்து
புரந்தரன்சீ காழிதனி லிருக்க வானின்
மீதுறையுந் தேவர்களெ லோரு மங்கு
மேவிஞ ரிந்திரன்முன் கூவி ஞரே. (௭௭)

(கூசு) கீர்த்தனம். இராகம் - சுராவேரி — சாப்பு.

பல்லவி.

இங்கேநீர்வந்திருந் திடலாமோ - அங்கே
எங்களைத்தவிக்கச்செய்திடலாமோ

அநுபல்லவி.

பொங்குவிண்ணுலகெங்கும்
புரக்குந் துரந்தரனே
பூவையிந்த்ராணியுடன்
மேவும் புரந்தரனே (இங்கே)

சரணங்கள்.

(க) பான்மதியமில்லாத வான்போலவேஅம
ராபதியும்பாழாய்ப் போச்சே - நறுந்
தேன்மலர்த்தருசிந்தா மணியுங்காமதேனுவும்
நீயன்கைவச மாச்சே - எங்கள்
மேன்மையெல்லாமடங்கித் தாழ்மையாகிநைந்தோமே
வெங்கனன்மெழுகென அங்கமுமெலிந்தோமே
கானவர்வலைப்பட்ட மான்போலவேநொந்தோமே
காடுமலையுஞ்சுற்றித் தேடியும்பால்வந்தோமே (இங்கே)

(உ) கைத்தலத்திலிருந்த புத்திரன்சயந்தனைக்
கைவிட்டு மறைந்தீரே - வெகு
பத்திரமாகவேவந் துற்றுமதுயிர்கருப்
பட்டியென் றுறைந்தீரே - மிக
எய்த்துக்கடலிற்சென்று நித்தமீன்சுமந்திட்டு
ஈனத்தொழிலைச்செய்து மானமுங்குலைந்திட்டு
கொற்றவசுரர்கையால் மெத்தவும்வாதைப்பட்டு
கொண்டெப்பொழுதுங் கத்தித்திண்டாடும் படிவிட்டு (இங்கே)

(ஈ) தலைவனில்லாக் குடியும் நிலைகொம்பில்லாக்கொடியும்
தளர்ந்து நின்றலை யாதோ - முன்பு
மலையின் சிறகரிந்த குலிசனுனையன்றிய
மரர்க்கொருகதி யேதோ - பரு
மலையது விழுந்தாலும் - தலையேதாங்கவேணும்
வாழ்வுந்தாழ்வு மனைத்துமிர்க்கும் சகசங்காணும்
பெலங்கொண்ட புகழ்தானே - நலமென்றறிந்து பூணும்
பேதமை விட்டாலல்லவோ - சாதிக்கும் திறமைதோணும் (இங்கே)

தன்மனைவி இந்திராணியை சாஸ்தாவிடம் அடைக்கலமாக வைத்து, இந்திரன் தேவர்களுடன் கயிலை செல்ல, அஜாமுகி இந்திராணியிருக்குமிடம் தெரிந்து அங்குவர அவ்விருவருக்கும் நடந்த சம்வாதம்.

விருத்தம்.

உரலதுமத் தளத்திடம்போய் முறைமொழிந்த கதையதுபோ
லும்ப ரிவ்வா
றுரைக்கமக பதிபுமிகு வருத்தமதாற் சசியொடுமிங்
கொளித்தேனென்றே
யருமையுட னெழுந்தமுதங் கடையுமந்நாண் மோகினிபு
மரனுஞ் சேர்ந்த
வப்பொழுதங் குதித்தவையன் றனைத்துதிக்க வெதிர்வரலு
மடியிற் றாழ்ந்து
பரவியடைக் கலமெனத்தன் மனைவியைவைத் துடன்கயிலைப்
பதியை மேவிப்
பரமசிவன் சமயநந்திப் பகவனிடம் வினவிமிகப்
பரிந்து போற்றிச்
சுராதிப னங்கிருக்கச் சூரபத்மன் றுணைவியஜா
முகிதன் பாங்கி
துன்முகியோ டெழுந்துசசி யிருக்குநிலை யறிந்தவள்பாற்
றொடர்சின் றாளே. (ருஅ)

பின்னும் விருத்தம்.

பாய்ந்திடும் புலிபோல் வானிற் பறந்தஜா முகியிவ் வாறு
வாய்ந்தசெண் பகப்பூங் காவில் வருந்தியே யரனை நோக்கி
யாய்ந்துமெய்த் தவங்கள் செய்யு மயிராணி யருகிற் சென்று
காய்ந்திடு கனல்போல் வார்த்தை கடுக்கின்றாண் முடுக்கின்றாளே. (ருகூ)

(சகூ) அடிமடக்கு திபதை. இராகம் - மோகனம்—சாப்புத்தாளம்.

(க) சற்றும்பயமில்லாம லிங்கெயே - வந்து
தனித்திருக்கிறதென்ன நங்கையே - இப்போ
கொத்தசுரர்கிங்கரர் எற்றியுன்கணவனைப்
பற்றிப்பிடிக்கவென்று சுற்றுமிவ்வனத்தினில் (சற்றும்)

(உ) இங்குநீர்வந்தவ ராரம்மா - நன்றா
யிசையவும்பேர்சொல்லு வீரம்மா - நான்
என்கணவனைப்பிரிந் - தங்கம்பதறிப்பர
மன்கருணைபெறத்த - வங்கள்செய்யுமிடத்தி (லிங்கு)

(௩) சூரன்றனுக்குத்தங்கைதானடி - பேர்
சொல்வேணஜாமுகி நானடி - மிகு
வீரமும்புஜபல - தீரமுங்கனவதி
காரமுஞ்சிறந்தவ - கோரவிக்ரமனுன (சூரன்)

(௪) வந்தகாரியந்தனைச் சாற்றுவீர் - என்றன்
மானந்தனையுநீர்காப்பாற்றுவீர் - பெற்ற
தந்தைதாய்துணையின்றி - நொந்துநானொருத்தியா
யிந்தவனத்தில்வந்தேன் - சிந்தையிரங்கியென்முன் (வந்த)

(௫) பருவவயதல்லவோ நீதானே - யான்
பகர்வதைக் கேளடிமடமானே - திவ்ய
மருமலரணிந்தசுந் - தரபுருஷர்களுடன்
சுரதலீலைகள்செய்து - சருவியனுபவிக்கும் (பருவ)

(௬) மனதைமிஞ்சிய ப்ரமையுண்டோ - வம்பு
வார்த்தைபேசுருயென்னகண்டோ - நல்ல
இனியவமுதமுண்டெவ் - வனமென்றுங்குறையாத
புனிதன் மருவுந்தெய்வ - வனிதையாகிய வென்றன் (மனதை)

(௭) தக்கபுத்திசொல்கிறேன் பெண்ணே - என்சொற்
றட்டாமற்கேளடி கண்ணே - இனிச்
சக்கரன் றனைவிடுத் - திக்கண மெனதண்ண
னுக்குமனைவியாகுன் - மிக்கமகிமையுண்டு (தக்க)

(௮) இந்தவார்த்தை நீசொல்லலாமா - பாரி
லெவர்க்குமிதுஸம்மதமாமா - உய
ரந்தணர் குலந்தனில் - வந்துபிறந்திருந்து
மெந்த வுலகங்களு - நிந்திக்க இடமாய்நீ (இந்த)

(௯) பாயும்புலியின் முன்னே வேதம் - சொல்லிப்
படிக்கிருயென்ன விநோதம் - நாங்க
ளாயுமுன்றனுலகைத் - தீயுங் கொளுத்தியேபின்
றேயுஞ் சிறைபிடிக்க - வேயுன்னிடத்தில்வந்தேன் (பாயும்)

(௰) மானம்போயுயிர் காவலுண்டோ - வீண்
வார்த்தைபேசுருயென்னகண்டோ - நல்ல
தானந்தவமில்லாத - ஈனன் றங்கையாகிய
நீ தொந்தரை செய்தாலென் - ப்ராணன்றனை விடுவேன் (மானம்)

(௰௧) ஜாலஞ்செய்யாதடி நீயே - இந்த
க்ஷணத்திலென்பால்வருவாயே - தநி
காலமும்பலன்களும் - கண்டுபிழையாவிட்டால்
கோலங்களழிந்துநீ - குரங்காய்விடுவாய்சொன்னேன் (ஜாலஞ்)

(௰௨) அக்ரமஞ்செய்யாதே பாவி - நீயுன்
னண்ணன்குடிக்குப்பச்சை நாவி - நாளும்
பக்கலின்மலங்கள்பு - சிக்குஞ்சூகரத்திற்குச்
சர்க்கரையமு தம்பு - சிக்கக்கிடைக்குமோவீண் (அக்ர)

அஜாமுகி இந்திராணியைக்கட்டிக் கொண்டுசெல்ல சாஸ் தாகோயிற் காவல்செய்யும் வீரமாகாளன் வந்து அஜாமுகி கரங் களைத்துணித்து இந்திராணியை மீட்டல்.

விருத்தம்.

காதகிய ஜாமுகிபின் வெகுண்டு நோக்கிக்
கலப்பாலின் னமுதினைக்கா லாலு தைத்த
பாதகிநீ யுன்னைவிட்டுப் போவ தில்லை
பாரெனவே நெறுநெறெனப் பற்கடித்து
மோதியிரு கைப்பிடியாற் கட்டிக் கொண்டு
முடுகிநடக் கையிற்சசியு முறைபிட் டேங்கச்
சாதவா கனன்காவற் காளன் கண்டு
தடுத்திட்டான் கொடியசண்டை தொடுத்திட் டானே. (சுய)

(ருய) கீர்த்தனம். இராகம் - மத்யமாவதி—அடதாளம்.

பல்லவி.

தண்டுகொண்டுமெறித்தானே - வீரமாகாளன்
சண்டைசெய்துநெறித்தானே

அனுபல்லவி.

அண்டர்க்கதிபன்றனக் கபயப்ரதங்கொடுத்து
அய்பனிவளையென்ற னடைக்கலமாய்விடுத்து
கண்டித்திருப்பதுங்கண் டண்டையில் வந்தடுத்து
கலங்கச்சிறையெடுத்த கள்ளியென்றுதடுத்து (தண்டு)

சரணங்கள்.

(க) காட்டழற்பொறியென நீறி - அவள்
கையிற்சூலமெடுத்துச் சீறி - மிக
வாட்டமுறயிவனைத் தாக்க - வீரன்
வாளாலதனையுந் தாளாக்கி - கை

தீட்டியவரோர்களை - போட்டி வூனக்கடுக்க
செருத்துவீரனோர்கணை - தெறித்ததனை முடுக்க
வாட்டிச்சிலகணையான் - மறுத்துன்றனைக்கடித்து
மாய்ப்பேனென்று துடித்து - வருமவளையிடித்து (தண்)

(உ) அக்கணமலையொன்றைப்பறித்து - வீர
னருகிலரக்கியு மார்ப்பரித்து - மார்பிற்
றைக்கும்படிக்கிவன்மேல் விடுக்க - வீரன்
றகர்த்தவளை யோரறைகொடுக்க - அவள்
பக்கத்திலொதுங்கினின் - றுட்கிமன நடுங்கி
பரவுங்கருடற்கண்ட - அரவம் போலே ஒடுங்கி
மக்கியுடல் தளர்ந்து - வாய்புலர்ந்தேயரற்றி
வாடியெழுந்துபயந் - தோடக்கண்டு துரத்தித் (தண்)

(ந) இந்த்ராணிதனைக் கட்டியிறுக்கி - விண்ணி
லேகும்போதவளைப் போயுறுக்கி - சசியைத்
தந்து போடியென்றுரையாடச் - சற்றுந்
தருகாமலவளுங்கொண்டோட - உன்னை
முந்தவிடுவேனோவென் - றந்க்ஷணமேகிட்டி
முடிவரையினில்விழு - மீடிபோலவேயதட்டி
மந்திரத்தினிலினி - மாங்காய்விழாதென்றெட்டி
வாள்கொண்டவளுடைய - தோளிரண்டையும் வெட்டி (தண்)

அஜாமுகி சூரனிடம் வந்து முறையிடல்.

விருத்தம்.

அண்டமா யிரத்தெட்டின் வளமை யெல்லா
மமைச்சருரை யாற்றெரிந்து மகிழ்ந்த சூரன்
றுண்டரிக முடன்கொலுவி லிருக்கும் போது
தோளிணையி லிரத்தவெள்ள வருவி பாய
மண்டெரியின் சிகையெனச்செந் தலைவிரித்து
மந்திநரி முகவரக்கி மார்கள் சூழ்ந்து
கொண்டிருபா லழுதுவர வஜமுகி கூக்
குரலிட்டா ளண்ணனிட முறையிட் டாளே. (கூக)

(ருச) கீர்த்தனம். இராகம் - காம்போதி—ஆதிதாளம்.

பல்லவி.

அண்ணவுங்களுடன்பெண்பிறந் தேனே - நல்
லருமைத்தங்கையென்றுபேர்சிறந்தேனே

அனுபல்லவி.

நண்ணும்பூவியோர்கண்டு நகைத்திடலானேனே
நடையற்றநாயினுங் கடையுற்றுப்போனேனே (அண்ணு)

சரணங்கள்.

(க) அசுரகுலத்திற்செனித்தடுத் தேனே - சபைக்
கலங்காரியென்றும்பேரெடுத் தேனே - இப்போ
சசியையுன்றனக்குச்சேர்த் - திடுமெண்ணங்தொடுத்தேனே
தடந்தோள்களைவீரன்வாள் - தனக்கிரை கொடுத்தேனே (அண்ணு)

(உ) கைபோயினிமேற்பாரிலிருப் பேனோ - அரைக்
கணமாயினுமுயிர்வைத்திருப் பேனோ - என்போற்
றையலரைக்கண்டுள்ளந் தளர்ந்தருவருப் பேனோ
தழைத்துங்களுடனுண்டு செழித்துடல்பெருப்பேனோ (அண்ணு)

(ங) விஜயமணிமண்டப மிடிந்ததே - இன்றுன்
வெற்றிக்கொடியிரண்டா யொடிந்ததே - நாளும்
அசையாக்கீர்த்திகளும்பெற் - றரசாண்டு விடிந்ததே
அரங்கிற்பிள்ளையார்செய்யக் - குரங்காக முடிந்ததே (அண்ணு)

(ச) திக்கண்டங்களுங்கட்டி வாழ்ந்தாயே - கண்
தெரியாமலேமகுடஞ் சூழ்ந்தாயே - அகங்
கைக்கொண்டய்யோகருவக் - கடலினிலாழ்ந்தாயே
கள்ளவமரர்க்கினி - யெள்ளலாய்த்தாழ்ந்தாயே (அண்ணு)

(ரு) நினைத்திப்படியென்மனம் பறக்குமோ - நான்
நில்லாச்சபையுனக்கு நிறக்குமோ - சுவை
கனித்தபருப்பில்லாத - கல்யாணஞ்சிறக்குமோ
கைத்தலம்போனதுன்பஞ் - செத்தாலுமறக்குமோ (அண்ணு)

(எ) மெய்யாயுனக்குப் பாடுபட்டேனே - சும்மா
விருதாவிற் கரமிழந்திட்டேனே - வீணி
லய்யோவென்னழகுமந் தமுஞ்சிந்திவிட்டேனே
அகத்தாலேதவமும்போ - யவத்திலேகெட்டேனே (அண்ணு)

தேவர்மேற்போர்க்கெழுந்த சூரனை அவன் மகன் பானுகோபன் தடுத்தல்.

விருத்தம்.

கோரவஜா முகியிவ்வா றலறிச் சூரன்
கொலுவின்முன்னே முறைகளிட்டுக் கலங்க வென்னை
வீரமா காளனென்றோர் தேவ னிந்த
விதஞ்செய்தா னென்றவுடன் சபை நடுங்கக்

காரவுணன் சினமிகுந்தக் கணமே தேவர்
கிளையெரித்துக் கொல்வேனென் றெழுந்த போதிற்
றீரமைந்தன் பானுகோ பனும்ப ணிந்து
தேற்றுவான் றந்தைசின மாற்று வானே (சுஉ)

(ருஉ) **கீர்த்தனம். இராகம் - தநபார்—திருபுடைதாளம்**

பல்லவி.

ஐயாயிதற்கோவிந்தக்கோபம் - ஆரும்
அறியாரோவுங்கள் ப்ரதாபம்

அநுபல்லவி.

தையலென்னத்தையின் - கையிரண்டுமரிந்தோன்
றன்னைச்சிதையாமலே - குன்னுந்தேவர்கள்மேலே (ஐயா)

சரணங்கள்.

(க) அச்சத்துடனமக்கு மச்சம்பிடித்துக்கொண்டு
ஐம்புலனுமொடுங்கிக் கம்பமுற்றுமருண்டு
இச்சககங்ள்சொல்லியே மெச்சும்பணிபுரிந்து
இணங்கிநம்மைநிதமும் வணங்குவதுந்தெரிந்து (ஐயா)

(உ) காட்டினுழைநரிசிங் கத்தைப்போய்ப்பிடிக்குமோ
கருவரிப்புலிதன்னை வரையாடுகடிக்குமோ
நாட்டில்நிஜமென்றிதைக் கேட்டோர்ஸம்மதிப்பாரோ
நரருந்தேவருநம்மைப் பொருளாகமதிப்பாரோ (ஐயா)

(ங) சிட்டுக்குருவிமேலே பாணந்தொடுக்கலாமோ
தேடிநம்மையடுத்த பேரைக்கெடுக்கலாமோ
அஷ்டதிசையாயிரத் தெட்டண்டங்களுக்குற்ற
அரசேவுமக்குத்தெரி யாதுண்டோவெனைப்பெற்ற (ஐயா)

பானுகோபன் தேவலோகஞ்சென்று ஜயந்தனோடெதிர்த்துப் போர்செய்து அவனையும் தேவர்களையும் பிடித்து வந்து தன்னகரத்தில் சிறைசெய்தல்.

விருத்தம்.

மைந்தனிவ்வா றுரைத்திடக்கேட் டசுரனதைக் கடிந்து
மறுத்திடத்தே வரைப்பிடிக்க மகன்படையோ டெழுந்தா
னந்தனோடி தனிற்பிரமன் றன்னையெதி ரழைத்தே
யஜமுகிக்குக் கைபொருந்தச் செய்துமப்பாற் சூரன்
சிந்தநவக் கிரகமஷ்ட திக்குளபா லரையுஞ்
சிறையினிலிட் டக்கணமே சித்ரவதை செய்தான்
றெருந்தமுடன் பானுகோ பனுஞ்சினந்து வானிற்
றொடர்ந்துசயந் தனைமறித்தங் கடர்ந்தமர்செய் தனனே (சுங)

(௫௩) திபதை. இராகம் - அசாவேரி—ஆதிதாளம்.

(௧) சேனையசுரர்சூழப் - பானுகோபனுஞ்சென்று
தேவருலகைச்சுற்றிக் கொண்டானே - அங்கே
வானவருக்கதிப - னாவிந்திரன்பெற்ற
மைந்தன்சயந்தனைப்போய்க் கண்டானே

(௨) சயந்தனைக்கண்டசுரன் - பயந்தோடாதேநில்லென்று
தடுத்துநிந்தைமொழிகள் கூறினான் - பாவி
பயந்தோடப்பயந்தோடத் - துரத்துகிறானென்றவன்
பலத்தயிராவதத்தி லேறினான்

(௩) ஊத்தையாகியநீங்கள் - நேற்றுவரையிலெங்கட்
கூழியஞ்செய்ததெல்லாம் போச்சுதோ - இப்போ
தேற்றிவில்வளைத்துக்கொண் - டார்த்தயிராவதமீ
தேறிநின்றெதிர்க்கவு மாச்சுதோ

(௪) நில்லுநில்லென்றதட்டிச் - சொல்லிச்சயந்தன் மீதில்
நெறுநெறெனச்சரங்கள் தூறினான் - நிறை
அல்லனையவசுரன் - மல்லார்புயமீதிலோ
ராயிரங்கணைவிட்டுச் சீறினான்

(௫) கண்டுபானுகோபன்வெ குண்டுசயந்தன்மீதிற்
கணக்கில்லாதசரம்விட் டடித்தானே - உடன்
அண்டர்க்கதிபன்மகன் கண்டகவசுரரை
அம்புபொழிந்துமண்ணில் மடித்தானே

(௬) சுக்கிரன்சொன்னமனு வைக்கருதியசுரன்
துதிக்கத்தன்படையெல்லாம் பிழைத்தாரே - பிழைத்
தக்கணமேசயந்த னைப்போய்வளைந்துகொண்டே
அதட்டியின்னமுஞ்சண்டைக் கழைத்தாரே

(௭) ஆயிரஞ்சரத்தினாற் கூறுசெய்துசயந்த
னசுரப்படையைப்பொடி யாக்கினான் - மற்று
மாயிரஞ்சரங்கள்விட் டசுரன்றேர்ப்பரியையு
மதஞ்செய்துசடுதியிற் போக்கினான்

(௮) தேரழிந்திடமறு தேரிலேறியசுரன்
சிலைவளைத்துக்கரத்திற் பிடித்தானே - அதி
வீராவேசங்கொண்டொரு நூறாயிரஞ்சரத்தை
விடுத்துச்சயந்தன்வில்லை யொடித்தானே

(கூ) அடுத்துப்பின்னுஞ் சரந்தொட் டயிராவதத்தோடவ
னலறிவிழும்படிக்குச் சாய்த்தானே - மண்ணில்
மடித்துத்தேவர்களையும் வாய்புலர்ந்திடவஞ்சன்
மசகமெனவேகையாற் றேய்த்தானே

(ய) தேய்த்திடக்கண்டயிரா வதமுஞ்சினந்தசுரன்
தேரைப்பொடித்துமண்ணில் வீட்டியே - எதிர்
வாய்த்தபானுகோபனை யீரிரண்டுகொம்பினால்
மார்பூடுருவக்குத்தி யாட்டியே

(யக) வருத்தும்பொழுதிற்கொம்பை முறித்தலகிலவுணன்
வலக்கையினாலோரறை போடவே - வாயா
லிரத்தஞ்சிந்திடச்சயந் - தனைவிடுத்துடனயி
ராவதங்கதறிக்கொண் டோடவே

பிரகஸ்பதி பகவான் இவ்விதமாக அசுரருடைய சரித்திரத்தைக்கூறி குமரக்கடவுளைத்துதித்தல்.

விருத்தம்.

வெங்கட் களிறும் பயந்தோட வெகுண்டு சயந்தன் முதலான
விண்ணோர் களையும் பிடித்தசுரன் விரைவிற் கொணர்ந்து தந்தைமுன்னே
யங்கச் சேதஞ் செய்திடவு மமுதி னுணர்வா லவர் பிழைக்க
வழிக்க முடியா தெனச்சூர னறிந்து சிறைச்சா லையிலடைத் தான்
துங்கக் கரிவெண் காடதனைத் தொழுது மருப்பும் பெற்றது வான்
றோயும் பொன்மா மலைமேவிச் சுரர்வேந் தனுமெய்த் தவம்புரிந்தா
னெங்கட் கரசே முன்னடந்த திவ்வா றெனவே தெய்வ குரு
விசைத்துக் குமரன் றிருப்புகழை யேத்தி வணங்கிப் போற்றினனே (கூச)

(ருச) கீர்த்தனம். இராகம் - சேஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

சரவணபவகுரு - பரனேயிதுதரு
ணங்கிருபைபுரிவாய்

அனுபல்லவி.

வரைமகளிருகர - வணைமிசைவளர்திரு
மகனே குகஷண் - முகனே கமழ்மிகு (சரவண)

சரணங்கள்.

(௧) அனுதினமும்மமர - ருருகியே படுதுயர்தீர்க்கவும் - நன்று
யவரவர்பதவியி - லணிபெறவருள் செய்துகாக்கவும் - வே
றினியுனையலதுல - கினிலெவர்பகர்வா
யிறைவா - மறைமலர் - நிறைவாய் - வளமுறு (சர)

(௨) அடலுறுமசுரர்க - ளடிகள்முடிகளற வீட்டியே - ரண
மதிர்சதையுதிரமுன் - அயின்முனைபருகிடவூட்டியே - கடல்
வடவையனலெனவே - முடுகியேபொடிபட
மடியா - விடிவிடர் - விடியா - தெழின்மிகு (சர)

(௩) மகபதிமகிழ்வுற - அணிமிகுமணிமுடி சூட்டியே - மரு
மலர்மருவியதரு - நிழலரசுரிமையை நாட்டியே - வானோர்
சகலமுனிவருன - தடி பிணைதொழவுஞ்
சலெனச் - சுகபல - னலனுற் - றிடவரு (சர)

குமரக்கடவுள் தேவர்கட்கு அபயமளித்தல்.

விருத்தம்.

நித்யபரி பூர்ணவத்து வாகி யெங்கு
நிறைந்தஷடாக் கரவுருவா யன்பர்க் கெல்லாம்
புத்தமுதாய்த் தோன்றியமெய்ப் பொருளே யெங்கள்
புன் கவலை மாற்றியருள் புரிவா யென்று
பத்திமிகு தெய்வகுரு விந்த வாறு
பாகசா தனனொடுநேர் பணிந்து நிற்கச்
சித்தமுவந் தருட்கண்ணா னோக்கி யையன்
றேற்றினா னஞ்சலெனச் சாற்றி னானே (௬௫)

அசுரகாண்டம் முற்றுப்பெற்றது.

விருத்தங்கள்	...	௬௫
வெண்பாக்கள்	...	௨.
கீர்த்தனங்கள்	...	௫௪.